கலந்துரையாடல்கள் ஆகியவையும் இந்த முகாம்களில் இடம்பெறும். இம்முகாம்களில், விவசாயிகள் ஒருங்கிணைந்த கையேடு, விவசாயிகள் தொழில்நுட்ப வழிகாட்டி, வேளாண் இடுபொருட்கள் ஆகியவை விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.

முற்பகல் 11–15

அனைத்துத் துறைகளின் பணிகள், திட்டப் பலன்கள் மற்றும் அலுவலர்களின் முயற்சிகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, விவசாயிகளுக்குத் தேவையான தொழில்நுட்பச் செய்திகள் மற்றும் திட்டப் பலன்கள் விவசாயிகளின் சொந்த கிராமத்திலேயே கிடைக்கச் செய்யும் வகையில் நடத்தப்படும் இந்த உழவர் பெருவிழா, எதிர்வரும் தமிழ்ப் புத்தாண்டு தினமான (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) ஏப்ரல் 13, 2012 அன்று தொடங்கி, தமிழகத்தில் உள்ள 16,564 வருவாய் கிராமங்களிலும் நடத்தப்படும். இந்த முகாம்களில் கலந்துகொள்ளும் விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவருக்கும் அறுசுவை விருந்து அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) நவீன வேளாண்மையில் உள்ள சவால்களை விவசாயிகள் எதிர்கொண்டு, அவர்களை வேளாண் வல்லுநர்களாக்கி, தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியை விரைவில் ஏற்படுத்த இந்த உழவர் பெருவிழா வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. தமிழ்ப் புத்தாண்டு தினம் முதல் உழவர் பெருவிழா முகாம்கள் நடத்துதல்—முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தரைமீது வந்து உதித்த சித்திரை முழு நிலவாக, சித்திரை முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டு தினமாக அறிவித்திருக்கிற நம்முடைய மாண்புமிகு போற்றுதலுக்குரிய (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இந்தச் சித்திரையில் தமிழகத்திலே இருக்கிற கோடிக்கணக்கான உழவர் பெருமக்கள் மகிழ்ந்து, அறுசுவை விருந்தோடு அதைக் கொண்டாடுகிற ஒரு வாய்ப்பையும்

2012 ஏப்ரல் 10] [முனைவர் செ.கு. தமிழரசன்]

உருவாக்குகிற வகையிலே, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தமிழ்ப் புத்தாண்டிலே, விதி 110—ன்கீழ் தித்திக்கிற ஓர் அறிக்கையை இன்றைக்கு இந்த மாமன்றத்திலே வைத்திருக்கிறார்கள். மண் மணம் மாறாமல், அதேநேரத்திலே விஞ்ஞானப் பார்வையோடு, புதிய விஞ்ஞான யுக்திகளோடு தமிழகத்திலே இருக்கிற 400 கூட்டுறவுத் தொடக்க வேளாண் வங்கிகளுக்கு 20 இலட்சம் ரூபாய் என்கிற வகையிலே, 80 கோடி ரூபாயை இன்றைக்கு வாரி வழங்கி தமிழகத்திலே புதுமைப் பசுமைப் புரட்சியை உருவாக்கியிருக்கிற புரட்சித் தாய், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு உழவர் பெருமக்களின் சார்பாக, குறிப்பாக விவசாயக் கூலிகளின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த பாராட்டுதலைத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடிக்கணக்கான விவசாயப் பெருமக்களினுடைய உற்ற தோழனாக விளங்குகின்ற, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால், இன்று அறிவிக்கப்பட்டிருக்கின்ற இந்த அறிவிப்பில், அம்மா அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போன்று, விவசாயிகளுக்கான கருவிகளைக் குறைந்த வாடகையிலே பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்து, அந்த 400 வேளாண் வங்கிகளுக்கு, ஒரு வங்கிக்கு 20 இலட்சம் ரூபாய் வீதம் கடன் தந்து, 80 கோடி ருபாயை வாரி வழங்கியிருப்பது, நுண்ணீர்ப் பாசனத்தில் இதுவரை கண்டிராத அளவுக்கு, இந்தியாவிலேலே ஒரு புரட்சிகரமான திட்டமாக மாண்புமிகு அம்மா அவர்கள்தான் 100 விழுக்காடு நிதியுதவியை மானியமாகத் தந்து, விவசாயிகளே அந்த நிதியைப் பயன்படுத்தி, தேர்வு செய்கிற கம்பெனியைப் பயன்படுத்துவதற்கான சுதந்திரத்தைத் தந்திருப்பது, இந்தியாவில் இதுவரை இல்லாத அளவுக்கு, விவசாயிகளின்மீது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செலுத்தி வருகிற அக்கறைக்கு ஒரு சான்று.

கிராம விழிப்புணர்வு முகாம்களை நடத்தி, தெருக்கூத்தின் வாயிலாக, நாடகங்களின் வாயிலாக, அரசுத் திட்டங்களுடைய பயன்களை மக்களுக்கு எளிமையாக எடுத்துச் செல்ல, முகாம்களின் வழியாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து, அந்த

விவசாயிகளினுடைய வாழ்வில் முன்னேற்றத்தை, விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான திட்டத்தை அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதுபோன்று உழவர் பெருவிழா மூலமாக உழவர்களுக்கு ஒரு சுவையான உணவைத் தந்து, இரண்டாம் வேளாண் புரட்சிக்கு வித்திட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய இந்த அறிவிப்பின் வழியாக (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு திட்டங்களுக்கு ஏற்கெனவே கோடிக்கணக்கான ரூபாய்களைத் தாராளமாகத் தந்துதவிய நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்று விவசாயிகளுக்கான இந்த அறிவிப்பில், கோடிக்கணக்கான விவசாயிகளினுடைய, குறிப்பாக, தமிழ்ப் புத்தாண்டிலே விவசாயிகளை இன்னும் கூடுதலாக மகிழ்விக்கின்ற அளவிலே இந்த நல்ல செய்தியை அறிவித்திருப்பதை தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவையின் சார்பாக வரவேற்று, நன்றி பாராட்டி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தனி ஒரு மனிதனுக்கு உணவில்லையென்றால், ஜகத்தினை அழித்திடுவோம்' என்றான் பாரதி. பாரதியின் கனவை உண்மையாக்குகின்ற வகையில், இன்று விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அறிக்கைக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) 70 சதவிகிதம் மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த விவசாயம் நலிந்துவிடக் கூடாது, நாளைய தமிழகம் உலகத்தின் உணவுக் களஞ்சியமாக மாறவேண்டும் என்ற எண்ணத்திலே, விவசாயத்தின் தேவையை அறிந்து தொலைநோக்குப் பார்வையுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தைத் தீட்டியுள்ளார்கள். பொருளாதார அடிப்படையிலே இந்தியா வளர்ந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில், 'தங்கத் தட்டு இருக்கும், உண்பதற்கு அதிலே சோறு இருக்காது' என்ற நிலை வரக்கூடாது என்பதற்காக, விவசாயத்தை ஒரு முக்கிய தொழிலாக எடுத்துக்கொண்டு, விவசாயத்தைப் பெருக்குவதற்காக பல மானியங்களை வழங்கி, பல சலுகைகளை வழங்கியிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நாளை

நடக்கப் போவதை நன்கு உணர்ந்துள்ளார்கள். விவசாயம் மிக, மிக முக்கியம். விவசாயத் தொழிலை விட்டுவிட்டு எல்லோரும் நகர்ப்புறத்திற்கு வந்துகொண்டிருக்கும் சூழ்நிலையில், அந்த விவசாயிகள் விவசாயத்தை நடத்துவதற்கு ஏதுவாக, அவர்களுக்கு உதவி செய்யும் வகையிலே, அவர்களுக்கென்று வாடகைக்கு இயந்திரங்கள் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதோடுமட்டுமல்லாமல், இந்தச் சித்திரை முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டு தொடக்கமாக அறிவித்திருப்பது ஒரு இனிப்பான செய்தி. ஏனென்றால், சித்திரைத் திருநாள்தான் தமிழ்ப் புத்தாண்டு நாள். சில பேர் அது தமிழ்ப் புத்தாண்டு நாள் இல்லை என்று சொல்வது மிகவும் வருத்தமாக இருக்கிறது. இச்செய்தியை மிகவும் அழுத்திச் சொல்லியிருப்பதுதான் எனக்கு மிகவும் இனிப்பான செய்தியாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், சிலர் நினைத்தால் இருக்கிற நாளையெல்லாம் அவர்கள் நாளாக மாற்றிவிடுவார்கள். அதை அழுத்தமாகச் சொல்வதற்காகத்தான் சித்திரைத் திருநாளில் விவசாயிகளுக்கு அறுசுவை உணவு கொடுத்து, விவசாயிகளைப் பெருமைப்படுத்த 'சித்திரைத் திருநாள்' ஏப்ரல் மாதம்தான் தமிழ்ப் புத்தாண்டு நாள், என்று அறிவித்ததற்கு மிக்க நன்றி. அதுமட்டுமல்லாமல், விவசாயத்தைப் பற்றி இவ்விழிப்புணர்வு செய்தியை, விவசாயம் தொழில்நுட்ப ரீதியிலே உயர்ந்து வருகின்ற சூழ்நிலையிலே விவசாயிகள் சிறந்த முறையில் இதைக் கையாளவேண்டும் என்பதற்காக, வேகமான விஞ்ஞான வளர்ச்சியிலே எதையெல்லாம் செய்தால் வேகமாக—ஒரு சிறு இடமாக இருந்தாலும், சிறு நிலமாக இருந்தாலும், அவர்கள் பயிரிட வசதியாக அவர்களுக்குத் தெரியவேண்டிய அளவிற்கு, அவர்களுக்கு வேளாண் விழிப்புணர்வு விழா நடத்தி, எடுத்துச் சொல்லி, அவர்கள்மீது தனிக் கவனம் செலுத்தி, அவர்களுக்காக அந்த விழாவினை அறிவித்து, அவர்களுக்குத் தொழில்நுட்பத்தைப் பற்றியும், அனைத்துச் செய்திகளையும் விவசாயத்திற்குத் தேவையான தொழில் செய்திகள் அனைத்தையும் அறிவித்திருப்பதும், உலக அளவில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதை அவர்கள் சொல்லியிருப்பதும், அறுசுவை உணவோடு அன்று அவர்களைப் பராமரித்து அவர்களை அந்தத் திருவிழாவிற்கு வரவழைப்பதும், நல்ல செய்தி.

அதுமட்டுமல்லாமல், எங்களுக்கு ஒரு சுயநலமும் இங்கேயிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல

செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள். இங்கு கூத்துப் பட்டறை மூலமாக நடிகர்களுக்கும் அதிகமான வேலைவாய்ப்பு கொடுத்திருக்கிறார்கள். நடிகர் சங்கத்தில் நலிந்த கலைஞர்கள் அதிகமாக இருக்கிறார்கள். இதைப் பறைசாற்றுவதற்கு, இதைச் சொல்வதற்கு, நலிந்த கலைஞர்களையும் நீங்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சிறப்பான அறிக்கையினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாக நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதன்மைத் தொழிலான விவசாயம், ரியல் எஸ்டேட்டினுடைய வளர்ச்சியில் மெல்ல, மெல்ல நசிந்து போய்விடுமோ என்று அச்சப்பட்டுக்கொண்டிருக்கிற வேளையில், ‘எந்த விதத்திலும் நான் விவசாயத்தை நலிந்து போக விடமாட்டேன்’ என்ற அடிப்படையில், தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் இன்று ஆக்கமும், ஊக்கமும் அளிக்கக்கூடிய வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அதற்கு புதிய தமிழகம் கட்சியின் சார்பாக என்னுடைய மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, இப்பொழுது விவசாயத்தில் இருக்கக்கூடிய மிகப் பெரிய பிரச்சினை தொழிலாளர்கள் பற்றாக்குறை. எனவே, தொழிலாளர்களுடைய பற்றாக்குறையைப் போக்கக்கூடிய வகையில், வேளாண் கருவிகளை அதிகமாக வழங்கி, அதை நவீனப்படுத்துவதற்கு, 20 இலட்சம் ரூபாய் வீதம் மானியத்தில் மொத்தம் 80 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கியிருக்கிறார்கள். நுண்ணீர் பாசனத்திற்கு 100 சதவிகிதம் சிறு விவசாயிகளுக்கு, 75 சதவிகிதம் பெரிய விவசாயிகளுக்கு மானியம் வழங்கியிருப்பது, அதுபோல, சாதாரணமாக இப்பொழுதெல்லாம், பத்மஸ்ரீ, பத்ம பூஷன் போன்ற பட்டங்களெல்லாம் யார், யாருக்கோ கொடுக்கிறார்கள். ஆனால் அல்லும், பகலும் பாடுபட்டு பல அதிசயங்களை நிகழ்த்தக்கூடிய விவசாயிகளுக்கு எந்தவிதமான ஆக்கமும், ஊக்கமும் கொடுக்கப்படுவது இல்லை. எனவே, அவர்களையும் கண்டறிந்து அவர்களும் கௌரவப்படுத்தப்படுவார்கள் என்ற அறிவித்திருப்பது, ஒரு அற்புதமான திட்டம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்பொழுது உண்மையிலேயே இரண்டாவது பசுமைப் புரட்சி தொடங்கிவிட்டதாகவே நாம் கருதலாம். எனவே, இந்த அருமையான திட்டத்தை அறிவித்திருக்கக்கூடிய தமிழ்நாடு முதல்வர் அவர்களைப் புதிய தமிழகம் கட்சி மனதாரப் பாராட்டுகிறது.

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

***திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்திரை ஒன்றை உழவருக்கு முத்திரை பதிக்கும் விழாவாக அறிவித்து, விவசாயம் தமிழகத்தின் முன்னுரிமை என்பதை எடுத்துக்காட்டி, பல திட்டங்களை வடிவமைத்து, கிராமங்களில் உழவர்களுக்கு விழிப்புணர்வு அளித்து, வருடம் முழுவதுமே உழவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் விதத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்த திட்டங்களுக்கு, விவசாயத்திற்கு முன்னுரிமை வழங்கும் மத்திய அரசில் இடம்பெற்றிருக்கும் காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகள் மட்டுமல்லாமல்; கால்நடை வளர்ப்போர், மீன் வளர்ப்போர் ஆகிய அனைவரையும் மனம் குளிர வைக்கக்கூடிய வகையிலே, 16,564 வருவாய் கிராமங்களில் அறுசுவை விருந்துடன் உழவர் பெருவிழா நடத்தி இந்த முதன்மைத் தொழில்களை சிறப்பான முறையிலே செய்து, தமிழகம் இன்று இந்தியாவிலேயே முதன்மையாக இருப்பதற்கு வழிவகுக்கக்கூடிய வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) சிறந்த திட்டங்களை அறிவித்ததோடு மட்டுமல்லாமல், அதை நடைமுறைப்படுத்துவதற்கும் உறுதி எடுத்திருக்கின்ற முதலமைச்சர் அவர்களுக்கு மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

திரு. ம. கலை அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு எவ்வளவு செலவழித்தாலும், இலவசமாகக் கொடுத்தாலும் அதை மனதார வரவேற்கின்ற பக்குவம் பாட்டாளி மக்கள் கட்சிக்கு உண்டு என்கின்ற வகையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கக்கூடிய இந்த அறுசுவை விருந்து உள்ளபடியே மகிழ்ச்சிக்குரியது; வரவேற்கக்கூடியது. காரணம், விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவரும் ஒரு வேளை உணவுகூட ஒழுங்காக சாப்பிட முடியாத ஒரு சூழ்நிலையில், அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு உரிய விலை கிடைப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கக்கூடிய தமிழக முதல்வர் அவர்களுக்கு நாங்கள் நன்றி தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதேநேரத்தில், இந்த அறுசுவை விருந்தை ஆண்டுக்கு நான்கு முறையாவது நீங்கள் பெருந்தன்மையோடு அளிக்க வேண்டுமென்ற எங்களுடைய கோரிக்கையை வைக்கிறோம். வணக்கம், பாராட்டுகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதன்மைத் தொழிலான வேளாண்மைத் தொழிலில், தமிழகத்திலே இரண்டாவது பசுமைப் புரட்சியை உருவாக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு, தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கின்ற இந்தத் திட்டங்களை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் மனப்பூர்வமாக நாங்கள் வரவேற்கிறோம்.

காந்தியடிகள் கிராமங்களில்தான் இந்தியாவின் ஆன்மா இருக்கிறதென்று சொன்னார். ஆனால், மாறிவருகிற பொருளாதார சூழ்நிலை, ஆன்மாவை இழந்த இந்தியாவை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. கிராமங்கள் நலிந்து கொண்டிருக்கின்றன. விவசாயம் மிகப் பெரிய நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது. மத்திய ஆட்சியாளர்கள்கூட தொடர்ந்து விவசாய வளர்ச்சி என்பது 2.2 சதவீதத்திற்குக் குறைவாக இருக்கிறதென்று கூப்பாடு போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் கூப்பாடோடு

2012 ஏப்ரல் 10] [திரு. சு. குணசேகரன்]

கூப்பாடாக இணைந்து கொள்ளாமல், தமிழகத்திலே விவசாயத்தில் ஒரு மாற்றத்தை, மறுமலர்ச்சியை உருவாக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயே முதன்மைத் தொழில் என்று தைரியமாக அறிவித்து, அந்த முதன்மைத் தொழிலை வார்த்தைகளால் மட்டுமல்லாமல், செயலிலும் கொண்டு வர வேண்டுமென்று நமது தமிழக முதல்வர் அவர்கள் சிறப்பான ஒருங்கிணைந்த திட்டங்களை உருவாக்கி அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில்தான், இன்றைக்கு விவசாயத்தில் நவீனத்தைப் புகுத்த வேண்டுமென்ற அடிப்படையில், இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்கு சிறப்பான திட்டமாக ஒரு கூட்டுறவு அமைப்புக்கு 20 இலட்சம் ரூபாய் என்ற அடிப்படையில் 80 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள்.

குறிப்பாக, தமிழகத்திலே இருக்கக்கூடிய விவசாயிகளில் சிறு, குறு விவசாயிகள்தான் 100–க்கு 90 சதவீதம் இருக்கிறார்கள். அவர்களுக்கு நவீன இயந்திரங்களைப் பயன்படுத்துவதில் நிதி நெருக்கடி இருக்கிறது.

அதேபோல, மாறிவருகிற விவசாயப் பிரச்சினைகளைப் புரிந்துகொள்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இல்லாத நிலையில், தமிழக முதல்வர் அவர்கள் உழவர் விழிப்புணர்வு முகாம்களை நடத்தி, அவர்களுக்கு வயிற்றுக்குச் சோறிட்டு, செவிக்கும், அறிவுக்கும் பயன் தருகிற வகையில் இன்றைக்குத் திட்டங்களைத் தீட்டியிருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கடவுள் எனும் முதலாளி, கண்டெடுத்த தொழிலாளி விவசாயி. (மேசையைத் தட்டும் ஒலி) உழவன் சேற்றிலே கால் வைக்கவில்லை என்றால், நாம் சோற்றிலே கை வைக்கமுடியாது. விவசாயப் பெருமக்கள் முன்னேற்றம் அடைய, வாழ்வில் வளர்ச்சி பெற, மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தர மாண்புமிகு அம்மா அவர்கள் அயராது உழைத்து நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுக்குத் தேவையான தொழில்நுட்பச் செய்திகள், திட்டப் பலன்கள், விவசாயிகளின் சொந்த கிராமத்திலேயே கிடைக்கச் செய்யும்

வகையில் வருகின்ற தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று அறுசுவை உணவு அளித்து உழவர் பெருவிழா நடத்தப்படும் என்னும் உலகத்திற்கே எடுத்துக்காட்டாக விளங்கும் முன்னோடித் திட்டத்தை அறிவித்து (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளின் விடிவெள்ளியாகத் திகழும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. சிறப்புக் கவன ஈர்ப்பு

பன்றிக் காய்ச்சல் நோய் தமிழகத்தில் பரவுவதைத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாட்டில் பன்றிக் காய்ச்சல் நோய் பரவுவதால் பொதுமக்களிடத்திலே ஏற்பட்ட நிலை குறித்து தே.மு.தி.க.–வைச் சார்ந்த மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா திரு. வி.சி. சந்திரகுமார் பேரவை விதி 55–ன் கீழும், தி.மு.க. கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மு.க. ஸ்டாலின், திரு. அர. சக்கரபாணி, திரு. எ.வ. வேலு, திரு. கே.ஆர். பெரியகருப்பன், திரு. ஜெ. அன்பழகன், திரு. கே.சி. பழனிசாமி மற்றும் திரு. நா. இராமகிருஷ்ணன் ஆகியோர் பேரவை விதி 55–ன் கீழும், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பில் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி மற்றும் திரு. ப. டில்லி பாபு ஆகியோர் பேரவை விதி 55–ன் கீழும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. பி.எல். சுந்தரம் ஆகியோர் பேரவை விதி 56–ன் கீழும், பா.ம.க.–வைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் பேரவை விதி 56–ன் கீழும், மனித நேய மக்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா மற்றும் திரு. அ. அஸ்லம் பாஷா ஆகியோர் பேரவை விதி 55–ன் கீழும், புதிய தமிழகம் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி பேரவை விதி 55–ன் கீழும் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்தவர்கள், கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். தே.மு.தி.க.–வின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.